# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2291/43 - 2022 අගෝස්තු මස 05 වැනි සිකුරාදා - 2022.08.05

*2291/43 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்

*ச.வ.சீ.எவ். 1/64*

**(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 40 ஆம் உறுப்புரையின் (1) ஆம் பந்தியின் (அ) என்னும் உட்பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் (40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின்கீழ் சனாதிபதியினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

**ரணில் விக்கிரமசிங்க,**
சனாதிபதி.

கொழும்பு,
2022, ஓகத்து 05.

**ஒழுங்குவிதிகள்**

2022 ஆம் ஆண்டு யூலை மாதம் 21 ஆந் திகதிய 2289/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகள் மூலம் திருத்தப்பட்டவாறாக 2022 ஆம் ஆண்டு யூலை மாதம் 18 ஆந் திகதிய 2289/07 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2022 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க அவசரகால (நானாவித ஏற்பாடுகளும் தத்துவங்களும்) ஒழுங்குவிதிகள் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றன:-

(1) அதன் 11 ஆம் ஒழுங்குவிதியின் 1 ஆம் பந்தியின் "360இ மற்றும் பிரிவுகள் 364, 365, 365அ, 365ஆ மற்றும் பிரிவுகள் 427 இலிருந்து 446 வரையான பிரிவுகளின்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "பிரிவுகள் 360இ, 364, 408 மற்றும் பிரிவுகள் 410 இலிருந்து 420 வரையிலான மற்றும் 427 இலிருந்து 446 வரையிலான பிரிவுகளின்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம்; அத்துடன்

(2) அதன் 12 ஆம் ஒழுங்குவிதியின் (1) ஆம் பந்தியின் (உ) என்னும் உட்பந்தியில் "360இ, 364, 365, 365அ, 365ஆ என்னும் பிரிவுகளின்" சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "360இ, 364 என்னும் பிரிவுகளின்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்.

EOG 08-0046


1A - G 37181 — 366 (2022/08) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.